பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 12 வியாழக்கிழமை [28 11-199] UTHAYAN – A Lively National Tamil Daily கதிர்: 2

நெருக்கடியைச் சந்தித்து திருப்புமுனை அடைவோம்

மாவீரர் தேசிய விழாவில் மாத்தயா

யாழ்ப்பாணம், நவம்பர் 28

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, இந்திய இராணுவம் இங்கு வந்த இரண்டொரு மாதங்களில் பெரும் நெருக்கடி நிலை உருவாகியது. அதேபோன்ற ஒரு நெருக்கடி இப்போது மக்களைச் சூழ்ந்துள்ளது.

இந்த நெருக்கடியை நாம் மன உறுதியுடன் எதிர்கொள்வோம். அவ்வாறு எதிர்கொண்டு எமது அரசியல் வரலாற்றில் ஒரு புதிய திருப்புமுனையை அடைவோம்.

ஆகவே மக்கள் வீண் மனக்கலவரம் கொள்ளாது இப்போதைய கஷ்டங்களையும், துன்பங்களையும் ஏற்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா).

கடந்த ஒருவார காலமாக நடைபெற்ற மாவீரர் வார நிகழ்ச்சிகளுக்கு சிகரம் வைத்தாற் போலவும், இறுதி வைபவமாகவும் நேற்றுப் பிற்பகல் மாவீரர் தேசிய விழா யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ் விழாவுக்கு வந்திருந்தனர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு மாறன் இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார்.

அங்கு பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய இராணுவம் இங்கு வந்த சில நாட்களில் ஏற்பட்டது போன்ற நெருக்கடியான சூழ்நிலை இப்போதும் உண்டாகியிருக்கிறது. அதனைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



அப்பா... ஜனதா தள்ளுக்கு தளம் இல்லாமல் போகப் போகுது போலை......!

கடலில் நேருக்குநேர் மோதத் தயாராகிறோம்!

கடற்படை தளபதி சூசை அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 28

"தரையில் மட்டுமல்ல, கடலிலும் எதிரிப் படையை நேருக்குநேர் எதிர்கொள்ள நாம் தயாராகிவருகிறோம். கடலிலும் நேரடி மோதல்களில் ஈடுபடும் காலம் வெகு தூரத்தில் இல்லை"

இவ்வாறு விடுதலைப் புலிகள் கடற்படை தளபதி திரு. சூசை கூறினார்.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடந்த மாவீரர் தேசிய விழாவில் பேசுகையில் அவர் மேற்கண்ட

(4 ஆம் பக்கம் பார்க்க)

வடபகுதியிலிருந்து

பதிவு செய்த வாகனங்களே வெளியே செல்ல அனுமதி!

யாழ்ப்பாணம், நவ 28

தமிழீழ போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவில், பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் மட்டுமே இனி வடக்குக்கு வெளியே செல்ல அனுமதிக்கப்படும்.

எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் இந்தப் புதிய நடைமுறை அமுலுக்கு வருகிறது.

வாகன உரிமையாளர்கள் கோண்டாவில் அலுவலகத்தில் ஆயிரம் ரூபா செலுத்தி இதற்கான படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் —

வவுனியா தடை முகாமில் வாகனங்களுக்கான பதிவு தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றன என்றும் — தமிழீழ போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது. (ஓ)

மாவீரர் நாளில் அஞ்சலி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ 28

மாவீரர் தினமான நேற்று மாவீரர்களுக்கு அஞ்சலி செய்யும் பல்வேறு நிகழ்வுகள் குடாநாடு எங்கும் இடம்பெற்றன.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று நண்பகல் மாவீரர் தேசிய விழா நடைபெற்றது.

பல்வேறு இடங்களில் அணிவகுப்புடன் அஞ்சலிக் கூட்டங்கள் நடைபெற்றன.

ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த மாவீரர் நினைவுத் தூபிகள் மாலைக்குப் பின் மின் விளக்குகளினால் ஒளிர்ந்தன.

தேசியக்கொடியின் நேற்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

அனுமதி அட்டைகள் வந்தன நாளை அதிபர்கள் பெறலாம்

ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

கொழும்பில் இருந்து விமானம் மூலம் நேற்று முன்தினம் பலாலி வந்து சேர்ந்த கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், அனுமதி அட்டைகளுடன் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

★ தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் இன்று தபாலில் சேர்க்கப்படும்.

★ அதிபர்கள் நாளை (வெள்ளி) தத்தமது கோட்ட அலுவலகங்களில் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ இடம்பெயர்ந்துள்ள மாணவர்கள் தத்தமது பிரிவு கோட்ட அலுவலகங்கள் தற்போது இயங்கும் இடங்களில் தமது அனுமதி அட்டைகளை நாளை மறுதினம் (சனிக்கிழமை) பெற்றுக்கொள்ளலாம்.

[illegible] வந்தனை கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார் (ஓ-5)

பலவீனப்படுத்திய பின் பேச்சு; அரசு எண்ணம் வெல்லுமாம்!

பிரதமரின் நம்பிக்கை இது

கொழும்பு, நவ. 28

விடுதலைப் புலிகளைப் பூரணமாகப் பலவீனப்படுத்தி விட்டு, பின்னர் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதே அரசாங்கத்தின் எண்ணம். அந்த எண்ணம் வெற்றிபெறும் என்றே நம்புகிறேன்;

இவ்வாறு தெரிவித்தார் பிரதமரும், நிதி அமைச்சரும், பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா.

நாடாளுமன்றத்தில், பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு சம்பந்தமான குழுநிலை விவாதத்திற்கு திரு. விஜேதுங்கா நேற்றுப் பதிலளித்துப் பேசினார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொருவரின் விருப்பமும் வடக்கு - கிழக்கு யுத்தத்தில் அரசு வெற்றி ஈட்ட வேண்டும் என்பதே;

[illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

வீரமரணம்

கடந்த ஜூலை மாதம் 21 ஆம் திகதி ஆனையிறவுச் சண்டையின் போது காயமடைந்திருந்த விடுதலைப் புலிப் போராளியான கணேஷ் (சம் சிவம் தயானந்தன் - மண்டூர்) என்பவர் நேற்று வீரமரணம் அடைந்து விட்டார். (ஓ-5)

மோதல்

அம்பாறையில் நேற்று அதிகாலை இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

கண்ணைக் கவர்ந்த அணிவகுப்பு மரியாதை

யாழ்ப்பாணம், நவ. 28

மாவீரர் தேசிய விழாவில் அணிவகுப்பு மரியாதை நிகழ்வு சிறப்பு அம்சமாக அமைந்திருந்தது. கண்ணைக் கவரும் நிகழ்ச்சியாக அது விளங்கியது.

திருநெல்வேலிச் சந்தியில் இருந்து ஆரம்பமான அணிவகுப்பில் விடுதலைப் புலிகள் ஆண்கள் விசேடபிரிவு, பெண்கள் விசேட அதிரடிப்பிரிவுப் போராளிகளும், தமிழீழ காவல் துறையின் ஆண், பெண் காவலர்களும் பங்கு கொண்டனர்.

பயிற்சிப் பாசறை படைத்துறைப் பள்ளி மாணவர்களின் அணிவகுப்பு வெகு சிறப்பாக இருந்தது. காவல்துறையினர் "பாண்ட்" வாத்திய இசையுடன் அணி வகுத்து வந்தனர்;

விழா மைதானத்தை வந்தடைந்த அணிவகுப்பாளர்களின் அணிவகுப்புமரியாதையை வி. பு. ம. முன்னணித் தலைவர் திரு கோ. மகேந்திரராசா, கடற்தளபதி திரு. சூசை, யாழ். மாவட்ட விசேட தளபதி திரு தமிழ்ச்செல்வன் ஆகியோர் ஏற்றுக்கொண்டனர்;

அணிவகுப்பு பவனி வந்த பாதைகளின் இருமருங்குகளிலும் ஏராளமான மக்கள் கூடி நின்று பார்த்தனர். (ஓ-3 5-15)

காரைநகர் கடற் பகுதியில் படை ரோந்து அதிகரிப்பு

சுழிபுரம், நவ 27

காரைநகர், சுழிபுரம், மாதகல் கடற் பகுதியில் கடற்படையினர் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்துக் காணப்படுகின்றனர்;

இதேசமயம், நேற்று காலை 6 மணியளவிலும் சுழிபுரம், திருவடிநிலை, சம்பில் துறைக்கு சமீபமாகவுள்ள கடற்பகுதியில் இருந்து பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. (ஓ-28)

ஜனதா தள் உடைகிறது!

புதுடில்லி, நவ. 28

இந்தியாவில் ஜனதா தள் கட்சி இரண்டாகப் பிளக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

கட்சித் தலைவர் எஸ். ஆர். பொம்மை மற்றும் வி. பி. சிங் ஆகியோர் ஓர் அணியிலும், அஜித் சிங் தலைமையில் மற்றோர் அணியும் மோதலில் இறங்கியிருப்பதை அடுத்து இந்நிலை ஏற்பட்டிருக்கிறது.

உத்தரப்பிரதேச சட்டப்பேரவையில் ஜனதா தள் தலைவரும் அஜித்சிங்கின் ஆதரவாளருமான கைலாஷ்நாத் சிங்கை கட்சியிலிருந்து நீக்கிவிட்டதாகக் கட்சித் தலைவர் பொம்மை அறிவித்திருப்பது மோதலை மேலும் வலுப்படுத்தியிருக்கிறது. (உ-த)

ஆசிரிய கலாசாலை மாணவருக்கு மீண்டும் அதே இடத்தில் கடமை

யாழ்ப்பாணம், நவ. 28

இந்த ஆண்டில் பயிற்சியைப் பூர்த்தி செய்து வெளியேறும் கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கு, அவர்கள் முன்னர் கடமையாற்றிய பாடசாலைகளுக்கே மீண்டும் நியமனம் வழங்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது;

இதேவேளை —

ஆசிரிய கலாசாலை மாணவர்களது 90, 91 ஆம் ஆண்டு இறுதிப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 7 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது;

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள், நேரசூசி என்பன கொழும்பில் இருந்து யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளரினால் இங்கு எடுத்து வரப்பட்டுள்ளன; (ஓ-5)

5I-A

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. ஊசி ஏற்றப்பட்டவை. வயது 60 நாட்கள். வரதன் சைக்கிள் கடை, அரசடி, நவாலி
(18873)

தேவை

சமூக சேவையில் நாட்டமுள்ள தங்கிப் பணிபுரியக் கூடிய ஓய்வு பெற்றவர் தேவை. உணவு, இருப்பிட வசதியுடன் ஊக்குவிப்புப் பணமும் வழங்கப்படும். ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விரும்பத்தக்கது 10-12-91 க்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 827, மே/பா உதயன். (4408)

வங்கி அலுவலர் - ஆசிரியத் தம்பதியினருக்கு ஒரு வயதுக் குழந்தையைப் பகல் வேளையில் பராமரிக்க அனுபவம் வாய்ந்த பெண் தேவை. ஞாயிற்றுக் கிழமைகளில் நேரில் வரவும் 38 - A, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (4412)

டைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், வீயூபோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம், (C/0798)

வரலாறு (U/L)

ஆண்டு 11, 10 வரலாறு சமூகக்கல்வி குறிப்புகள் விற்பனையாகின்றன. பொதுப் பரீட்சையில் இடம்பெற்ற பெரும்பாலான வினாக்களுக்கான விடைகளைக் காணலாம். ஆசிரியர்: ந. மயில்வாகனம் எக்ஸ்போ புத்தகசாலைகளிலும் பெறலாம்.
(18872)

சோதிடம்

உங்கள் சாதகங்கள், மந்திரங்கள் அனைத்தையும் டிசம்பர் முதலாம் திகதிக்கு முன்பாக பெற்றுக் கொள்ளவும். டிசம்பர் 3 தொடக்கம் 24 வரை ஸ்தாபனம் மூடப்பட்டிருக்கும். ஸ்ரீசக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 146, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(18874)

பேரதெனியா
இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்.

A/L 92 கணக்கியல்

பங்குடமை

யோகராஜா

30-11-1991
காலை 6 மணி.
(18882)

---

3 ஆம் வருட நினைவஞ்சலி



அமரர் சின்னத்துரை குணரத்தினம்

[பிரபல வர்த்தகர், மரக்காலை உரிமையாளர், வாகன முதலாளி, அரசாங்க ஒப்பந்தகாரர்]

அன்னையின் மடியில்:
1956 - 01 - 27

ஆண்டவன் அடியில்:
1988 - 12 - 01

திதி: 1991 - 11 - 28

2 ஆம் வருட நினைவஞ்சலி

செல்வி சின்னத்துரை சித்திரவதனி

[வெளிவாரி கலைப் பட்டதாரி மாணவி]

அன்னையின் மடியில்:
1966 - 11 - 23

ஆண்டவன் அடியில்:
1989 - 12 - 22

திதி: 1991 - 12 - 30

பெரும் குடும்பத்தில் நற்றவப்
பயனாய்த் தோன்றிய செல்வங்களே
சான்றோர் போற்றும் நற்குணமே
வேரோடு மரம்புரண்டு வீழ்ந்ததுபோல்
நயவஞ்சகரின் சூழ்ச்சியால் உன்னுயிர்
பிரிந்ததுவே கணப்பொழுதில்
பிரிந்த துயர் மாறும் முன்னே
ஒரு தேன் கூட்டில் குழவி
கலைந்தது போல
தீராத கொடிய நோயினால் வாடின
உனது தங்கை சித்திராவையும்
உன்னுடன் கூட்டிச் சென்றாயே!

உங்கள் இருவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
சின்னத்துரை குடும்பத்தினர்.

"விஷ்ணு மகால்",
கண்டி வீதி,
பளை.

[18843]

ஜனாதிபதி டிச. 7 இல் வவுனியா வருகை

கொழும்பு நவ. 28 ஜனாதிபதி பிரேமதாச அடுத்த மாதம் 7 ஆம் திகதி வவுனியாவுக்கு விஜயம் செய்கிறார்.

வவுனியாவில் சிவில் நிர்வாகத்தை அமுல் நடத்த இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஜனாதிபதி நேரில் சென்று பார்வையிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ - த)

காணவில்லை

லான்சர் மொடல் சாளி [Lancer Model Charly] சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் 24-11-1991 ஞாயிறு இரவு 7 30 மணிக்கும் 9 30 மணிக்கும் இடையில் மூளாய் மாவடி பிரட்டில் உள்ள ஆ. சற்குணானந்தராசா என்ற திருத்துனர் வீட்டிலிருந்து திருடப்பட்டுள்ளது.

இதன் விவரம்: செட்டை, சோக்கேபிள், எயர் கிளீனர் பில்ரர், பிற்பக்க ஒரு மிதிகட்டை என்பன இணைக்கப்படவில்லை.

Chassis No. CF 50 - 3063678
Engine No. CF 50B - 3063703
மோட்டார் சைக்கிள் இல. CC 178

இதுபற்றி விவரம் அறிந்தோர் உடனடியாக வட்டுக்கோட்டை வி. பு. ம. மு. காரியாலயத்திற்கு அறிவிக்கவும். விவரம் அறியத் தருவோருக்கும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சி. சிவமோகன்,
வாகன உரிமையாளர்.

[18878]

யாழ். மாவட்ட இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்க பொதுக்கூட்டம்

இடம்: இல. 9, சின்னக்கடை வடக்கு வீதி
(சங்கக் காரியாலயம்)

காலம்: 29-11-91 வெள்ளிக்கிழமை
காலை 10 30 மணி

மாநகரசபை, பிரதேசசபை, பட்டினசபை, நகரசபை, கிராமசபைகளின் கீழ் அனுமதி பெற்ற ஆட்டிறைச்சி—மாட்டிறைச்சிக் கடை வியாபாரிகள் அனைவரையும் தவறாமல் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேற்படி கூட்டத்தில் மாநகரசபை, உள்ளூராட்சி, பிரதேசசபை பிரமுகர்கள் கலந்து கொள்வர்.

க. சி. கிருஷ்ணன்,
செயலாளர்.

மண் மீட்புக்காக உயிர் ஈந்த மாவீரர்களை நினைவு கூருகிறோம்.

யாழ். மாவட்ட இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்கம்

[C/0943]

தமிழீழ காவல் துறை
காவலர் பதவிக்கான விண்ணப்பம்

கீழ்க் காணும் தகைமையுடையவர்கள் தமிழீழ காவல் துறையின் காவலர் பதவிக்கான விண்ணப்பத்துடனும், சான்றிதழ்களுடனும் 29 - 11 - 1991 வெள்ளிக்கிழமை தமிழீழ காவல் துறையின் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைக் காரியாலயத்திற்கு சமூகம் தரவும்.

வயது: 18 — 30
கல்வித் தகைமை: க. பொ. த. (சாதாரணம்)
உயரம்: 5' — 6''

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பொறுப்பாளர்,
த. ஈ. கா. துறை.

[சி-0941]

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை

தாதி பயிற்சிப் போதனாசிரியர்

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அரசாங்க அல்லது தனியார் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்றுப் பதிவு செய்தோர், அனுபவம் உள்ளோர், பயிற்சி அளிக்கத் தகைமை உடையோர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை 03 - 12 - 1991 செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக அனுப்பி வைக்கவும். நேர்முகப் பரீட்சை 04 - 12 - 1991 புதன்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு இப் பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

தெரிவு செய்யப்படும் தாதிமார்கள் பல இடங்களிலும் சென்று பணியாற்ற வேண்டும்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

[C/0942]

தொண்டா முயற்சி குறித்து மட்டக்களப்பு எம். பி.

அமைச்சர் தொண்டமான் மேற்கொண்டுள்ள மத்தியஸ்த முயற்சி, பேச்சுவார்த்தைக்கான நல்லதோர் சூழலாக அமைகிறது. எனவே தொண்டமான இப்போது எடுத்து வைத்திருக்கும் கால் ஒருபோதும் பின்னோக்கி இழுக்கப்படக் கூடாது.

இவ்வாறு தெரிவித்தார் [illegible] குழுவின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பஷீர் சேகு தாவூத் -

அமைச்சின் வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இப்படிக் கூறினார்.

Modern Education Centre,
KARAVEDDY.

விஞ்ஞான, கணித ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான

போட்டிப் பரீட்சை

பொது உளச்சார்பு (நுண்ணறிவு)
பொது அறிவு

ஆகிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

காலம்:- 30 - 11 - 1991
சனி பி.ப. 2.00 மணி

மேலதிக விவரங்களுக்கு நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும்;

[சி-0946]

தவறிவிட்டது

அவசர தேவைக்காக எடுத்துச் செல்லப்பட்ட பணமான ரூபா 30 000/- யாழ். ஆஸ்பத்திரி வீதிக்கும், இராசாவின் தோட்டம். மடம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து "புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம்" கல்வி நிலையத்தில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் தரப்படும்;

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி;

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-1015)

---

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

கிருபாகரன் பிரதீபன்

[தாவடி இந்து பாடசாலை, 5 ஆம் ஆண்டு மாணவன்]

மலர்வு: 23 - 3 - 1978
உதிர்வு: 28 - 11 - 1988

பாசமுள்ள எம்முடன்
காலமெல்லாம்
கலந்துறவாடியிருப்பாயென
காத்திருந்த எமை மறந்து
கடுகதியில் போனதென்ன?
நிதம் நிதம் உனை நினைத்திடும்,
தந்தை, தாய்,
சகோதரர்.

"தீபன்"
போட்டோ & வீடியோஸ்,
அரசடி ஒழுங்கை,
தாவடி

[4411]

உதயன்

எந்த வழி?

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஆற்றிய உரை மிகவும் காத்திரமானதாகும். ஈழத் தமிழர்களுடைய இன்றைய அரசியல் பின்னணியைத் தெளிவுபடுத்துவதாக அமைந்திருக்கிறது.

அரசாங்கம், சிங்கள மக்கள், ஸ்ரீலங்காவில் நடக்கும் யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்பதில் அக்கறை உள்ள வெளிநாடுகள் மற்றும் சர்வதேச சமாதான இயக்கங்கள் ஆகியவற்றுக்கு ஒரு முக்கிய செய்தியாகக் கூட அது அமைகிறது.

தமிழ் மக்கள் எதனை விரும்புகிறார்கள். எந்த இலட்சியத்தை நோக்கிப் போராடுகிறார்கள். அவர்களுடைய அரசியல் அபிலாசைகள் எவை? சிங்கள மக்களைப் பற்றியும் அவர்களது சுதந்திரம் குறித்தும் என்ன கருதுகிறார்கள். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு சிங்கள மக்கள் செய்ய வேண்டியது என்ன? — ஆகிய பிரதான கேள்விகளுக்கு திரு. பிரபாகரன் தெளிவான, விளக்கமான, விவரமான பதில்களைத் தெரிவித்திருக்கிறார்.

நாம் எமது வரலாற்றுத் தாயகத்தில் ஒரு தேசிய மக்கள் இனம் என்ற அந்தஸ்துடன், நிம்மதியாக கௌரவத்துடன் வாழ விரும்புகிறோம். "எம்மை நிம்மதியாக வாழவிடுங்கள்" என்பதுதான் எமது மக்களின் எளிமையான அரசியல் அபிலாசை. இந்த நியாயமான, நீதியான, நாகரீகமான வேண்டுகோளை சிங்கள அரசு எப்பொழுது அங்கீகரிக்கிறதோ, அப்பொழுது தான் ஒரு நிரந்தர சமாதானமும், தீர்வும் ஏற்பட வாய்ப்புண்டு —என்ற நிலைப்பாடு சர்வதேச சமூகத்தின் கண்களைத் திறக்கும் என்று நம்பலாம்.

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்கு - நிபந்தனையில்லாத பேச்சுக்குத் தயார். நம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்துவிட்டிருக்கிறோம். ஆனால் சமாதானத்தின் வழியைத் திறப்பதா அல்லது யுத்தத்தின் பாதையில் செல்வதா என்பதை அரசு தான் தீர்மானிக்க வேண்டும் - என்றும் திரு. பிரபாகரன் வலியுறுத்தி இருக்கிறார்.

ஆனால், அரசு சமாதான வழியை நாடுவதாக நடித்துக் கொண்டு, யுத்தம் புரியவே விரும்புவதாகத் தோன்றுகிறது. ஆனையிறவிலும், மணலாறிலும் தமக்கு வெற்றி கிடைத்ததால் இராணுவமேலாதிக்க நிலையைத் தம்மால் அடைய முடியும். இராணுவ ஆதிக்கம், அழுத்தம் அத்தோடு மேலதிகமாக பட்டினி ஆயுதம் என்பவற்றை தக்கபடி பயன்படுத்தினால் தமிழர்கள் கேட்கும் உரிமைகளை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படமாட்டாது. தான் விரும்பிய சலுகைகளை வழங்கித் தமிழர்களை அடக்கி ஆள வேண்டும் என்ற உள் நோக்கமே முழுக்க முழுக்க அரசினருக்கு இருப்பதாகக் கொள்ள வேண்டியுள்ளது.

அரசு சமாதானத்தை விரும்பியிருந்தால், தமிழர்களின் நியாயமான உரிமைகளை வழங்க நினைப்பதாயிருந்தால் கடந்த ஒரு வருடத்தை வீணாக்கியிருக்க வேண்டியதில்லை. அது தான், இது தான் என்று குழம்பி, உறுதியான நிலைப்பாட்டில்லாமல் 'வழுவழுத்துக்' கொண்டிருக்கத் தேவையில்லை.

உண்மையாகவே அது தமிழர்களின் உரிமைகளை வழங்க மனதார விரும்பினால் தனது சொந்தத் தீர்வு ஒன்றை முன்வைக்கட்டும் பார்ப்போம்!

கேரள கடலில் மிதந்து வரும்
வெடி மருந்து சிலிண்டர்கள்

கையாள வேண்டாம் என மீனவருக்கு எச்சரிக்கை

புதுடில்லி, நவ. 28

கேரள மாநிலத்தின் திருவனந்தபுரத்தில் உள்ள கொல்லம் மாவட்ட கடற் பகுதியில் வெடிமருந்துகள் அடங்கிய சிலிண்டர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடலில் மிதந்து வந்த சிலிண்டர் ஒன்றை திறக்க முற்பட்ட மீனவர் ஒருவர் அது வெடித்த போது படுகாயம் அடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிலிண்டர்கள் குறித்து வெடிகுண்டு, வெடிமருந்து நிபுணர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கடலில் மிதந்துவரும் சிலிண்டர்களைக் கையாள வேண்டாம் என்று மீனவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர். [இ-த]

விசர் நாய்க்கடி மருந்து விமானம் மூலம்

யாழ்ப்பாணம், நவ. 28

தட்டுப்பாடாக இருந்து வந்த விசர் நாய்க்கடி ஊசி மருந்து விமான மூலம் வந்து சேர்ந்துள்ளது.

யாழ். சுகாதாரப்பணிப்பாளர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலம் இம் மருந்தை அனுப்பியுள்ளார். (இ-18)

ஆயுதம் வாங்கும் ஏஜென்சி
உறுப்பினராம் ஜெகன்

புதுடில்லி, நவ. 28

விடுதலைப் புலிகளுக்கு ஆயு[illegible]தங்களை வாங்கிக் கொடுக்கும் ஜெகன் என்பவர் உலகம் முழுவதிலிருந்தும் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வாங்கிக் கொடுக்கும் ஏஜென்ஸி ஒன்றைச் சேர்ந்தவர்.

காரைக்காலில் கைப்பற்றப்பட்ட விடுதலைப் புலிகளின் கப்பலின் முக்கிய மாலுமியான காதர் என்று அழைக்கப்படும் ராஜ்குமார் மேற்கண்டவாறு பொலீஸ் விசாரணையின்போது தெரிவித்தார் என்று விசேட விசாரணைப் பிரிவின் தலைவர் ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஜெகன் கடந்த அக்டோபர் மாதம் சிங்கப்பூர் சென்றார் என்றும், ஆயுதங்களை வாங்குவதும் தாய்லாந்தில் தங்கி உள்ள தமது சகாக்களின் விசாக்களை நீடிப்பதுமே அவரது நோக்கமாக இருந்தது என்றும் ஆனால் போதிய ஆயுதங்கள் சிங்கப்பூரில் வாங்கப்படவில்லை என்றும் [illegible] தெரிவிக்கப்பட்டுள் [இ-த]

மேலு-
ளது.

கல்விச் சுற்றுலா பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் நவ. 28

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தினரால் கடந்த ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்ட தியாகி அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுப் போட்டித் தேர்வில் கொத்தணி, மாவட்ட மட்டங்களில் முதலாம் இடம் பெற்ற மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா பற்றிய கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு குளப்பிட்டியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க தலைமைச் செயலகத்தில் நடைபெறும். (த)

தடுத்து வைக்கப்பட்டுள்ள

பொலீஸாரின் உறவினர்கள்
டிசம்பர் முற்பகுதி வருவர்

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 42 பொலீஸாரையும் பார்வையிட அவர்களின் உறவினர்கள் டிசம்பர் முதல் வாரம் கப்பல் மூலம் அழைத்துவரப்படவுள்ளனர்.

கொழும்பில் இருந்து அவர்கள் திருகோணமலைக்கு வாகனங்கள் மூலம் அழைத்து வரப்பட்டு, அங்கிருந்து கப்பல்மூலம் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்படுவர் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

காங்கேசனில் இறக்கப்படும் பொருள்கள்

முதலில் போதிய அளவு
களஞ்சியப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், நவ. 28

காங்கேசன்துறை உணவுக் களஞ்சியத்தில் கணிசமான அளவு உணவுப்பொருள்கள் களஞ்சியப்படுத்தப்பட்ட பின்னரே அவற்றை வாகனங்கள் மூலம் எடுத்துவர ஏற்பாடுகள் செய்யப்படும்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

பொருள்களை எடுத்து வருவதற்கான லொறிகளையும் பொருள்கள் ஏற்றி இறக்குவதற்கான தொழிலாளர்களையும் அரச அதிபர் ஒழுங்கு செய்வார். செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அந்த வாகன அணிக்கு பாதுகாப்பு வழங்கும்.

வாகன அணி செல்லும் பாதைகள் குறித்தும், பாதுகாப்பு வலயம் குறித்தும் இரு சாராருக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டுள்ளது. (இ-3)

சிங்களக் குடியேற்றம் பற்றி
அஷ்ரப் எச்சரிக்கிறார்

அக்கரைப்பற்று, நவ. 28

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களை சிறுபான்மை இனமாக்குவதற்காக தெய்யத்தகண்டி என்ற பகுதி ஒன்றை ஏற்படுத்தி அப்பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டு குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன.

இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் பேசும் மக்களை மேலும் சிறுபான்மையினராக்குவதற்கு பெரும்பான்மை சமூகத்தினரின் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் சொன்னார்.

அக்கரைப்பற்றில் இடம் [illegible] கூட்டம் [illegible] இதனைக் கூறினார். (த)

முகாம் அகற்றப்பட்டது

அம்பாறை, நவ. 28

அம்பாறை மாவட்டத்தில் அன்னமலை [illegible] வீதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் [illegible] அங்கிருந்து அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-த)

விவசாய டிப்ளோமாப் பயிற்சி நெறிக்கு
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம் நவ. 28

விவசாயத் திணைக்களத்தால் விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குண்டசாலை, பெல்வெஹர, அங்குனுகொலபெலஸ்ஸ ஆகிய இடங்களில் அமைந்துள்ள விவசாயக் கல்லூரிகளில் 1993/94 இருவருட டிப்ளோமா பயிற்சி அளிக்கப்படும்.

[illegible]ம், தமிழ் இரு[illegible] சிங்க[illegible] மொழிகளிலும் [illegible]கள் இடம்பெறும்.

இப்பயிற்சிக்கு அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை தமிழ், சிங்களம் ஆகிய இருமொழிகளிலும் 1992 மார்ச் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சையில் போதனா மொழி, கணிதம் ஆகியவற்றுடன் மற்றும் இரு குறிப்பிட்ட பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

விண்ணப்ப முடிவு திகதி 1991 டிசம்பர் 13 ஆம் திகதி ஆகும்.

போட்டிப் பரீட்சை யாழ்ப்பாணம் உட்பட 10 நகரங்களில் நடத்தப்படுமெனவும் [illegible]க்கப்பட்டுள்ளது.

[illegible] முழு விபர[illegible]ப்ப[illegible] அறி[illegible]

இது பற்றி[illegible]களும், மாதிரி விண்ணப்ப படிவமும் 1991 அக்டோபர் 18 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (இ-10)

அமிர்தலிங்கம் கொலை வழக்கு

கொழும்பு, நவ. 28

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அ. அமிர்தலிங்கம் கொலை வழக்கு நேற்று புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில், நீதிபதி எஸ். என். டி. ஜெ. சூரிய முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட இருந்தது.

இந்த வழக்கில் வின்சென்ட் வில்லியம் மரியதாசா என்பவர் மீது, கொலைக்கு சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இவர் இப்பொழுது விளக்கமறியலில் இருந்து வருகிறார்.

கொழும்பு புள்ளர்ஸ் வீதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து திரு. அமிர்தலிங்கமும், திரு. வெ. யோகேஸ்வரனும் 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதி சுடப்பட்டுக் கொல்லப்பட்டனர் என்பதும் -

இந்தக் கொலைச் சம்பவத்தின்போது மூவர் அதே இடத்தில் வைத்து அமிர்தலிங்கத்தின் மெய்ப்பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டதும் தெரிந்தவையே.

விசு என்ற ராஜலிங்கம் அரவிந்தன், பீட்டர் என்ற அலோசியஸ் லியோன், அறிவு என்ற சந்தையா சிவகுமாரன் ஆகியோரே சம்பவத்தின்போது கொல்லப்பட்ட மூவரும் ஆவர். (இ-த)

உணவு அனுப்ப முடியாவிடில்
சவப்பெட்டிகளைக் கொடுங்கள்!

யாழ். நிலைமை குறித்து எம். பி.

கொழும்பு, நவ. 28

யாழ்ப்பாண குடாநாட்டு மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்குகிறார்கள். அவர்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்ப முடியாவிட்டால், அந்தப் பத்து லட்சம் மக்களுக்குச் சவப்பெட்டிகளையாவது அனுப்பி வையுங்கள்.

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் திரு. மாவைசேனாதிராசா எம்.பி.

வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு மக்களை அரசாங்கம் பட்டினி போட நினைத்தால் அவர்கள் இறப்பார்களே தவிர அடிபணிய மாட்டார்கள் அவர்களின் சுதந்திர உணர்வுகளை அடக்கி ஒடுக்கி விட முடியாது.

யாழ்ப்பாண மக்களைப் பட்டினி போடுவதன் மூலம் வெற்றி கொள்ளமுடியாது. அவர்களின் அபிலாசைகளை ஒடுக்கிவிட முடியாது.

பத்து லட்சம் மக்களை பட்டினி போடுவதை அனுமதிக்க முடியாது. இறப்பவர்களைப் புதைப்பதற்குக் கூட அங்குள்ள மக்கள் வக்கற்றவர்களாக இருக்கிறார்கள்.

பாதுகாப்புச் செலவினத்துக்கு கூடுதல் நிதியை ஒதுக்கி, புலிகளை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு எங்கள் மக்களை கொலை செய்வதை அனுமதிக்க முடியாது— என்று கூறினார். (த)

ஆறுமுகநாவலர் குருபூசை இன்று

யாழ்ப்பாணம், நவ. 28

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தினம் இன்றாகும். இதனையொட்டி பல இடங்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிமன்றம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிகள், திருநெல்வேலி [illegible] மன்ற சனசமூக நிலையத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும்.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கு, உரும்பராய் கற்பக விநாயகர் கோவில் மண்டபம் ஆகிய [illegible]களிலும் இன்று மாலை 4 மணிக்கு சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (இ-5)

வழக்கறிஞரின் பிணை மனு நிராகரிப்பு

சென்னை, நவ. 28

கடந்த 7 ஆம் திகதி திருச்சிராப்பள்ளியில் கைதான வழக்கறிஞர் மருதநாயகம் தாக்கல் செய்திருந்த பிணை மனுவை சென்னை நீதிமன்றம் நேற்று நிராகரித்தது.

இவர் ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் பத்மநாபா கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-த)

மரண அறிவித்தல்கள்

ஜெகதீஸ்வரன் சொரூபன்

காரைநகர், சத்திரந்தலைப் பிறப்பிடமாகவும், வெள்ளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரன் சொரூபன் 25-11-1991 இல் வெள்ளாங்குளத்தில் காலமானார். இவர் ஜெகதீஸ்வரன் தம்பதிகளின் அன்பு மகனும், கனகசபை சிதேவிப்பிள்ளையின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 25-11-1991 இல் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறேன்.

தகவல்:
திருமதி க. சிதேவிப்பிள்ளை
அராலி தெற்கு.

[18885]

துரைராசா ஷாந்திகுமார்
(இலங்கை வங்கி)

துரைராசா ஷாந்திகுமார் [இலங்கை வங்கி] கொழும்பில் 26-11-91 இல் காலமானார்.

அவர் முன்னாள் யாழ். மேயர் [illegible] சபாபதி பிள்ளை துரைராசா [illegible] களின் அன்பு மகனும் [illegible] ரும் கி[illegible] பா[illegible] காலஞ்சென்ற நாகேஸ்வரி தம்பதி[illegible], இந்திரவின் அன்புக் கணவ[illegible] குமார், நிரேஷ்குமார், ஜெகன்குமார், [illegible]வதி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதிகள் இராஜலகி, இராஜகுமாரி, இராஜசுந்தரி, திரு. ஸ்ரீகுமார், திரு. ஜெயக்குமார், திருமதி இராஜகனேஸ்வரி [கவி இராஜலிங்க அமைச்சர்] திரு. நந்தகுமார் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இல 40, றிட்ஜ்வே பிளேஸ் பம்பலப்பிட்டியில் 27-11-1991 புதன்கிழமை நடைபெற்றன.

தகவல்:
வ. பாலசிங்கம்,
29/9, ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை.

(18[illegible]80)

வேலுப்பிள்ளை இளையதம்பி

சரணவாய் கரவெட்டியை சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. வேலுப்பிள்ளை இளையதம்பி அவர்கள் காலமகிவிட்டார்.

இவர் திருமதி பூரணம் [இளைப்பாறிய ஆசிரியை] அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற அன்னராணி, அருட்செல்வி கிறிஸ்ரபெல் [மாகாணத் தலைவி திருக்குடும்ப கன்னியர் சபை]] புஸ்பராணி [ஆசிரியை, கரவெட்டி], அருணந்தன் [கணக்காளர், அவுஸ்திரேலியா], யோகராணி [ஆசிரியை, கரவெட்டி], அன்பு செல்வநாதன் [டாக்டர் அவுஸ்திரேலியா], இந்திராணி, கலாராணி ஆகியோரின் அருமைத் தந்தையும், தேவசகாயம் [இளைப்பாறிய தபால் அதிபர்], செல்வராசா, இன்பம் [அவுஸ்திரேலியா] சிவசிதம்பரம், சறோஜா [அவுஸ்திரேலியா], தர்மபாலா, ஆகியோரின் அன்பு மாமனாரும், யூடி, றஞ்ஜிற், றஞ்சன், யோகநசீர், கிறிஸ்ரீன், யூட், யோகராஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

இவரது இறுதிச் சடங்கு 28-11-1991 வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கரவெட்டி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
திருமதி பூரணம் இளையதம்பி
"இராணி இல்லம்",
சரணவாய், கரவெட்டி.

(18797)

சிவசம்பு சிற்றம்பலம்
[சம்பந்தர்]

புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புத்தூர் சிவன் தேவஸ்தானம், புத்தூர் சோமஸ்கந்த அன்னசத்திரம், புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி ஆகியவற்றின் தர்மகர்த்தாவும், இயக்குநரும் ஆகிய சிவசம்பு சிற்றம்பலம் காலமகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் சிவசம்பு - காலஞ்சென்ற மங்கையர்க்கரசி ஆகியோரின் அருமை மகனும், திருமதி செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (லண்டன்) அவர்களின் மைத்துனரும், தேவசேனா, ஸ்ரீவள்ளிநாயகி, பராசத்தி [யாழ்ப்பாணம் செயலகம்] ஆகியோரின் அன்புத் தந்தையும் த. விஸ்வலிங்கம் [ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்], இ. சந்திரபாலா. இ. செல்வச்சந்திரன் [ப. நோ. கூ. சங்கம், அச்சுவேலி] ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் புத்தூர் மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் 28 11-91 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் குடும்ப மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
திருமதி சி. செல்லம்மாவும்,
குடும்பத்தினரும்.

[18798]

நெருக்கடியை..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி] இக்கட்டான நிலையில் குமரப்பா, புலேந்திரன் ஆகியோரின் தியாகத்தால் நாமும் துணிந்தோம். மக்களும் துணிந்தனர் அந்நியப் படையை விரட்ட முடிந்தது.

இன்றைய நெருக்கடியையும் நாம் எதிர்கொண்டு அரசியலில் புதிய திருப்புமுனையை அடைவோம்.

மக்கள் படும் துன்பங்களுக்கு முடிவு காண வேண்டும். அதன் பொருட்டு உரிமைகளைச் சமாதான வழியில், அமைதி வழியில் பெறவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறோம். அந்த முயற்சியின் வெற்றி அடைவது அரசாங்கத்தின் கையில் தங்கி உள்ளது.

ஆனால் எங்கள் [illegible] டத்தை மாற் [illegible] கு [illegible] வாடிக்கும் நெருக்[illegible]னும் மக்களை எங்களிடமிருந்து அந்நியப்படுத்தும் நோக்குடனும் மொரு[illegible] அரசு இராணுவ நெருக்கடிகளைத் திணிக்க முயல்கிறது.

அரசு [illegible] நாட்டில் இராணுவ விஸ்தரிப்புகளைச் செய்துள்ளது. பொருளாதாரத் தடையை குறிப்பாக உணவுத் தடையை மக்கள் மீது திணித்துள்ளது.

இவ்வாண்டு எமது மக்கள் மத்தியில் பல கருத்துக் குழப்பங்களும், நம்பிக்கையீனங்களும் நிலவுகின்றன.

நெருக்குதல்களையும் சமுதித் தன்மையும் தியாகங்களின் மூலம் சந்தித்து வளர்ச்சி பெற்றவர்கள் நாம். இந்த நெருக்குதல் எம்மை அழிக்காது. எம்மிடம் மனஉறுதி உண்டு. தர்மம் உண்டு. எப்போதும் நம் வெற்றி பற்றுத் [illegible] தோற்போம் என்ற கேள்விக்கே இடமில்லை நிச்சயம் விடிவு உண்டாகும் — என்று திரு மத்தயா கூறினார்.

இவ்விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. யோகி, திரு வே பாலகுமாரன், யாழ் மாவட்ட விசேட தளபதி திரு தமிழ்ச்செல்வன், மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். [அ-3-5]

[illegible]

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] யும்,

நாட்டின் தேசிய ஒற்றுமையைக் காப்பாற்ற வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். இந்த யுத்தத்தில் வெற்றி காணப்படவேண்டும்.

விடுதலைப் புலிகளைப் பூரணமாகப் பலவீனப்படுத்திப் பின்னர் அவர்களுடன் பேச்சு நடத்தவேண்டும் என்ற அரசின் எண்ணம் வெற்றியளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

எவ்வாறாயினும் பேச்சுக்களுக்கான கதவுகள் இன்னும் திறந்தே உள்ளன — என்றார். [அ-எ]

கடலில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது கடற்பிரிவை பலமான நிலையில் நாம் வைத்திருக்காததாலேயே, இன்று எதிரிப் படை கடற்பகுதியை ஆக்கிரமித்துள்ளது.

கடலில் சண்டை என்றால் இறுதிச் சண்டை என்ற நிலையில் தான் போராளிகள் செல்ல வேண்டும். தரைச் சண்டை அப்படியல்ல. சில வேளைகளில் சந்தர்ப்ப சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பின்வாங்கி கூட வந்துவிடலாம். கடற்சண்டை வேறு விதமானது.

தமிழீழ கடற்பிரதேசத்தில் இப்போது எதிரி நிலைநாட்டி [illegible] இந்த விடுபட. நெருக்கு நேர் மோதும் நிலை விரைவில் ஏற்படும். அதற்கு மக்கள் தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும் — என்றார்.

மாவீரர்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] மாலை இறக்கப்பட்டதை அடுத்து மாவீரர் வார நிகழ்வுகள் முடிவடைந்தன.

தமிழீழ தேசிய நாளை ஒட்டி வடநாட்டின் அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள், தனியார் வர்த்தக நிறுவனங்கள் என்பன மூடப்பட்டிருந்தன, சந்தைகளும் கூடவில்லை. [உ-3-5-15]

1992 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,
சுழிபுரம்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் சுழிபுரம் / சங்கானை / வட்டுக்கோட்டை அராலி ஆகிய நிர்வாகப் பிரதேசத்திற்குட்பட்ட கீழ்க் குறிக்கப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக் கடைகள், சந்தைக் கடைகள் ஆகியவற்றிற்கான சீல் வைத்த கேள்விகள் 12-12-1991 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கான கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் பத்திரப் பணத்தையும் 10-12-1991 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி சம்பந்தமான தேவையான விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்திலும், உப அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

உப அலுவலகம்	குத்தகையின் தன்மை	ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த தொகை	கேள்வி வைப்புப் பணம்	கேள்விப் பத்திரப் பணம்
1. சுழிபுரம்				
	1. சத்தியக்காட்டுச் சந்தை	27[illegible]55 00	10[illegible]. 00	25. 00
	2 பலைசுட்டிச் சந்தை	9680 00	190 00	25. 00
	3. தொல்புரம் மக்கிச் சந்தை	550 00	50 00	25 00
	4. பொன்னாலைச் சந்தை	2200 00	100 00	25 00
	5 மாட்டிறைச்சிக் கடை	8800 00	1[illegible]0 00	25 00
	6 ஆட்டிறைச்சிக் கடை	1100 00	50 00	25. 00
	7. புதிய சந்தைக் கடை இல 5	27[illegible]00 00	250. 00	25. 00
	8. கருவாட்டுக் கடை	550. 00	50. 00	25 00
	(மாட்டிறைச்சிக் கடை சித்தியெய்திய கேள்விதாரரால் அமைக்கப்படல் வேண்டும்)			
2. சங்கானை				
	1. மாட்டிறைச்சிக் கடை	52855. 00	250 00	25 00
	2. ஆட்டிறைச்சிக் கடை	3210 00	100 00	25 00
	3. கருவாட்டுக் கடை	1100 00	100. 00	25 00
	4. பொதுமரக்கறிச் சந்தை	55055 00	250 00	25 00
	5. மீன் சந்தை	528[illegible]5 00	250 00	25. 00
3. அராலி				
	1. மாட்டிறைச்சிக் கடை	1650 00	100 00	25 00
	(மாட்டிறைச்சிக் கடை வியாபாரத் தளம் சித்தியெய்திய கேள்விதாரரால் பிரமாணங்களுக்கமைய அமைக்கப்படல் வேண்டும்)			
4. வட்டுக்கோட்டை				
	1. பொதுச் சந்தை	30289 00	100. 00	25 00
	2. ஆட்டிறைச்சிக் கடை	3300 00	100. 00	25. 00
	3. மாட்டிறைச்சிக் கடை	1650. 00	100. 00	25. 00

குறிப்பு: வட்டுக்கோட்டை மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சிக் கடைகளுக்கு சித்தியெய்திய கேள்விதாரர் பிரமாணங்களுக்கமைய தாமே வியாபாரத் தளத்தை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

து. வைத்திலிங்கம்,
விசேட ஆணையாளர்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,
தலைமையலுவலகம்,
சுழிபுரம் 2[illegible]-11-1991.

[சி-1014]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டி[illegible]
யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள [illegible]
28. 11. 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.